Vaidika Pandit Sri.V Hanmaran Collection, Sholinganallur, Chennai

ஒளி ஓவியம்

2003 மார்ச்
இதழுடன்
இலவச
இணைப்பு!



தேர்வில் அதிக மார்க் வாங்க... பக்தி வழிமுறைகள்...!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy.

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம்

சரவணபவ
வழங்கும்

தேர்வில் அதிக மார்க் வாங்க பக்தி வழிமுறைகள்!

வித்வான்
வே.லட்சுமணன்

ஓம் சரவணபவ மார்ச் 2003
இதழுடன் இலவச இணைப்பு
03

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சரஸ்வதி–

தமிழில் சரஸ்வதிக்கு அற்புதமான பெயர் 'கலைமகள்'. 'வீணா கான வாணி' என்றும் சொல்லுவார்கள். அறுபத்து நான்கு கலை களுக்கும் நாயகி ஆவாள் இவள். சரஸ்வதி கடாட்சம் ஒருவருக்கு இருந்தால் கவிச் சக்கரவர்த்தி ஆகமுடியும். கம்பன் சரஸ்வதி பேரில் சரஸ்வதி அந்தாதி பாடினார். காளி தாசருக்கும் சரஸ்வதி அருள் கிடைத்தது. இன்னும் காளமேகப்புலவரும் சரஸ்வதி அருளாலேயே ஆசுகவி எனும் பெயர் பெற்றார். இன்றைய உலகத்தில் பௌதிக,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விஞ்ஞான வளர்ச்சிகள் பெருகியிருக்கின்றன. நிலம், நீர், தீ, காற்று, வானம் என்கின்ற பஞ்ச பூதங்களின் மகாசக்தியைக் கண்டறிந்து, எத்தனை எத்தனையோ அற்புதங்களை ஆய் வாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அத்தனைக்கும் மூல தெய்வம் கலைமகளாம் சரஸ்வதியே ஆவாள்.

துர்க்கா, லஷ்மி, சரஸ்வதி ஆகிய மூன்று தேவியரின் சக்திகளையும் உள்ளடக்கிய மகாசக்தி- பராசக்தி ஆவாள். பராசக்தியின் ஒரு வடிவத்தில் பார்வதியும் இருக்கின்றாள்; லட்சுமியும் இருக்கின்றாள்; சரஸ்வதியும் இருக்கின்றாள். இந்த மூவரிலும் பராசக்தி இருக்கின்றாள். இந்த மூல தத்துவத்தைப் புரிந்துகொண்டு வழிபடவேண்டும்.

காக்கும் தெய்வமாகிய மகாசக்தி எல்லா வடிவங்களிலும் தோன்றி, நமக்கு ஞானத்தைத் தருவாள். அஞ்ஞானத்தைப் போக்குவாள். நல்ல படிப்பில் ஆர்வத்தைத் தருவாள். படித்த படிப்பு மறக்காமல் இருக்கச் செய்வாள். தொடுக்கப்படும் கேள்விகளுக்குத் தக்க விடை கூறும் தகுதியைத் தருவாள். தேர்வுத்தாளைத் திருத்துவோரின் நெஞ்சத்தில் புகுந்து, நாம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முதன்மை பெறுவதற்குரிய அளவுக்கு மார்க் குகள் பெற்றுத் தருவாள். அந்த அன்னைக்கு அடிபணிந்தால் நாம் பெற முடியாத ஐசுவரியம் இருக்க முடியுமா என்ன?

'தாயே! நின் தாள் சரணடைந்தேன்' என்று, தாயின் புனிதத் திருநாமங்கள் பலவற்றையும் சொல்லி, மூல மந்திரங்களையும் சொல்லி, தியான ஸ்லோகங்களையும் உச்சரித்து, பிரார்த் தனைப் பாசுரங்களைப் பாடி, புறச் சிந்தனை களை அகற்றி, இறைச் சிந்தனையோடு பக்தி செய்ய வேண்டும்.

அதேநேரத்தில் தியானம், ஸ்தோத்திரம் எல்லாம் முடித்த பிறகு, தேர்வு எழுதுவோர், பாடம் பயில்வோர், இன்னும் ஆய்வுக் கூடங்களில் ஆய்வு தொடங்குவோர், புதிய சாதனைகள் செய்யப் புறப்படுவோர்- இப்படி அனைவருமே தெளிந்த மனத்தோடு, ஆழ்ந்த ஈடுபாட்டோடு அவரவர் பணியில் கவனமுடன் ஈடுபடவேண்டும்.

குறிப்பாக, மாணவர்கள்! பள்ளி மாணவராய் இருந்தாலும் சரி; கல்லூரி மாணவராயிருந்தாலும் சரி- படிப்பதை உணர்ந்து படிக்க வேண்டும். படித்ததை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மனத்தில் பதித்துக்கொள்ள வேண்டும். வேண்டும்போது அதை மீண்டும் எடுத்து, அசைபோடுவதுபோல் சிந்திக்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட பாடத்தை இதுபோல் மூன்று முறை படித்து, மூன்று முறை சிந்தித்தால் மூச்சு இருக்கும் வரை அது நெஞ்சைவிட்டு அகலாது. அதாவது அவ்வளவு திடமாகப் பதிந்துவிடும் என்று சொல்கிறேன். இதை மாணவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

இரண்டு முறை எழுதுவது பத்து முறை படிப்பதற்கு ஈடாகும். ஒரு கேள்விக்குரிய விடையைக் காகிதத்தில் இரண்டு முறை எழுதினால் அது மிக விரைவில் மனத்திற்குள் எழுதியது போன்றதாகும். அந்த எழுத்தை யாராலும் அழிக்க முடியாது. ஏனென்றால் எழுதப்பட்ட அந்த வாசகங்களுக்கு என்ன பொருளோ, அந்தப் பொருள் உள்ளத்தால் உணரப்பட்டு, உள்ளத்திலே பொறிக்கப்பட்டு விடுகின்றது.

பள்ளி அல்லது கல்லூரியின் ஆரம்ப காலத்தில் அலட்சியமாக இருந்துவிட்டு, தேர்வுக்கு முந்தைய ஒரு குறுகிய கால

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கட்டத்தில் இராப்பகல் விழுந்துவிழுந்து படிப்பதனால் பெறவேண்டிய முழுப்பயனைப் பெற்றுவிட முடியாது.

உடலை வருத்திக் கொள்கின்ற சங்கடமும் ஏற்படும்.

மனமும் சுறுசுறுப்பாக இயங்காது.

தூக்கம் வரும். விழித்துக் கொண்டால் மீண்டும் தூக்கம் வரும்.

ஐந்தாறு முறை படித்தாலும் நெஞ்சில் தங்காது.

காரணம், தேர்வுக்கு அதிக நாட்கள் இல்லையே என்கிற ஆதங்கம், ஏக்கம். இந்த ஆண்டு தேர்வில் நாம் தோற்றுவிடுவோமோ என்கிற அச்சம். இவையெல்லாம் நெஞ்சைச் சூழ்ந்து கொண்டு ஆர்ப்பரிக்கும்.

பொதுவாகச் சங்கடம் என்பது அதுவாக வருவதில்லை. அதை விரட்டியடிக்கக்கூடிய வலிமை இல்லாத காரணத்தினால், பள்ளத்தில் பாயும் வெள்ளம்போல் அது பலவீனமான உள்ளத்தை நோக்கி வருகிறது.

'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்' என்றார் ஔவையார்.

நித்தமும் தவறாமல் படிப்பது அவசியம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

செய்ய வேண்டிய நேரத்தில் செய்து விட்டால் எதுவுமே கடினமாகாது.

வள்ளுவர் சொன்னார். 'கற்க கசடறக் கற்பவை' என்று.

எந்தவிதமான தொய்வு இல்லாமலும் குறை இல்லாமலும் கற்கவேண்டும்.

அவ்வாறு கற்றால் கல்வித் தெய்வங்கள் கருணைக் கண்கொண்டு பார்க்கும் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை.

எல்லா நல்ல நெறிகளையும் கடைப் பிடித்து, திட்டவட்டமாகப் படிக்கவும் செய்து அசைக்க முடியாத அளவிற்கு அறிவுத்திறன் பெற்று, தேர்வுக்குத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிற அறிவு நிறைந்த மாணவர்கள் நிச்சயமாகப் பெரும் வெற்றி பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

இருந்தாலும், மற்றொன்றும் தேவைப் படுகிறது. அதுவே அடிப்படை மூல சக்தி!

'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே' என்பார்கள் அல்லவா?

இயங்குகிறவர்களை இயக்குபவன் என்று ஒருவன் இருக்கிறான். இயக்குபவன் சர்வ வல்லமையும் படைத்தவன். அந்த மூல

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கர்த்தாவின் முழு அருளையும் பெறுவது மிக முக்கியமாகும்.

நன்றாகப் படித்து, தெளிவான அறிவைப் பெற்றிருக்கும் மாணவனுக்கு மூல கர்த்தாவின் அருள் நிச்சயமாக இருக்கும் என்பது உறுதி.

அதேநேரத்தில் அந்த மூலப்பொருளாகிய பரம்பொருளின் நாயகத்துவம் கொண்ட கலைகளின் அதிதேவதைகளை மந்த்ர ஸ்லோகங்களாலும், தோத்திரப் பாசுரங் களாலும், எண்ணித் தியானித்துத் தினமும் குறிப்பிட்ட ஒரு நேரத்தை அதற்கென வகுத்துக்கொண்டு, புனிதமான தெய்வ சிந்தனையில் ஆழ்ந்தால் உள்ளத்தில் தெளிவு ஏற்படும். உற்சாகமும் ஏற்படும். அச்சமும் மடமையும் அகலும். இந்தத் தெய்வ பலத் தினால் மனோபலம் ஏற்படுவதுடன், மதி நுட்பமும் ஏற்படும். படித்த படிப்புகள், தெரிந்து கொண்ட விஷயங்கள் எல்லாம் தேர்வுக்காலங்களில் மனத்திரையில் 'பளபள' வென்று பிரகாசிக்கும். வெள்ளைக் காகிதத்தில் அவற்றைக் கேள்விகளுக்கு ஏற்ப மிக அற்புதமாகப் பொறித்துவிடலாம்.

-இப்படி தெய்வ சக்தி, சுயமுயற்சி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



குரு பகவான்

இரண்டுமே தேவைப்படும் என்பதை உணர்தல் வேண்டும். எல்லாத் துறைகளுக்குமே இது பொருந்தும். எல்லாச் செயல்களுக்குமே இது பொருந்தும்.

குறிப்பாக மாணவர்களுக்கு இந்தத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தீவிரமான முயற்சி மிக முக்கியமாகும்.

கலைகளுக்கெனக் குறிப்பாகச் சில தெய்வங்களைப் பெரியோர்கள் வகுத்துக் காட்டியிருக்கிறார்கள். சரஸ்வதி, கலைமகள் என்று அழைக்கப்படுகிற கலாதேவி-வித்தையின் நாயகி ஆவாள். ஹயக்ரீவர் ஞானத்தைத் தருகின்ற பரம் பொருளின் அம்சமாவார். இன்னும் தட்சிணாமூர்த்தி யாகிய குருமூர்த்தி படிப்பினால் பெறக்கூடிய அறிவை, அந்த மிகப் பெரிய ஞானத்தைத் தம்முடைய அருளால் வழங்கக்கூடிய குருதேவர் ஆவார். இவர்களையெல்லாம் வழிபட்டால் நிச்சயமாக உள்ளத்தில் ஒரு வெளிச்சம் ஏற்படும். இருள் அகலும். சூழ்ந்து கொண்டு கவ்விக்கொள்ள வரும் மாயை இருக்கும் இடம் தெரியாமல் அகன்று ஓடும்.

இந்தத் தெய்வங்களின் அருளைப் பெறுவதற்குத்தான் பெரியோர்கள் ஸ்தோத்திரங்களையும், துதிப்பாடல்களையும், மூல காயத்ரிகளையும் நமக்கு வழங்கி யிருக்கிறார்கள். இவற்றை ஓதுதல் அவசியம்.

அவை என்னென்ன?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academ

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சரஸ்வதி தச ஸ்லோகம்

நீஹார ஹார கனஸார ஸுதாகராபாம்
கல்யாணதாம் கனக சம்பக தாமபூஷாம்
உத்துங்க பீன குசகும்ப மனோஹராங்கீம்
வாணீம் நமாமி மனஸா வசஸா விபூத்யை.

மாணிக்யவீணாம் உபலாலயந்தீம்
மதாலஸாம் மஞ்ஜுள வாக்விலாஸாம்
மாஹேந்த்ர நீலத்யுதி கோமளாங்கீம்
மாதங்க கந்யாம் மனஸா ஸ்மராமி
சதுர்புஜே சந்த்ர கலா வதம்ஸே
குசோந்நதே குங்கும ராகசோணே
புண்ட்ரேக்ஷு பாசாங்குச புஷ்பபாண
ஹஸ்தே நமஸ்தே ஜகதேக மாத:

ஸ்ரீமஹா ஸரஸ்வதி காயத்ரீ

ஓம் வாக் தேவ்யை ச வித்மஹே
விரிஞ்சி பத்ந்யை ச தீமஹி
தன்னோ வாணீ ப்ரசோதயாத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ அகஸ்த்ய முனிவர் அருளிய
ஸ்ரீ ஸரஸ்வதி ஸ்தோத்ரம்

த்யானம்:

யா குந்தேந்து துஷார ஹார தவளா
யாசுப்ர வஸ்த்ரா வ்ருதா
யா வீணா வரதண்ட மண்டித கரா
யாச்வேத பத்மாஸனா
யா ப்ரஹ்மாச்யுத சங்க ப்ரப்ருதிபி:
தேவைஸ் ஸதாபூஜிதா
ஸா மாம் பாது ஸரஸ்வதீ பகவதீ
நிச்சேஷ ஜாட்யா பஹா.

C-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academ

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கவிச் சக்ரவர்த்தி கம்பர் அருளிய
ஸரஸ்வதி அந்தாதி:

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்.

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரை போற் கையும் தூடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லும் சொல்லாதோ கவி.

சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கம லாசனத் தேவிசெஞ்சொல்
தார்தந்த என்மனத் தாமரையாட்டி சரோருக மேல்
பார் தந்த நாதன் இசைதந்த ஆரணப்பங்கயத்தாள்
வார் தந்த சோதி அம்போருகத்தாளை வணங்குதுமே.



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



குரிய பகவான்

ஸ்ரீஹயக்ரீவர் தியான சுலோகம்

ஞானானந்தமயம் தேவம்
நிர்மல ஸ்படிகாக்குதிம்
ஆதாரம் ஸர்வ வித்யானாம்
ஹயக்ரீவ முபாஸ்மஹே.

C-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academ

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சரஸ்வதி ஸ்துதி:

வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்
வீணை செய்யும் ஒலியிலிருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத்திருப்பாள்
உள்ளதாம் பொருள் ஓதியுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள் நின்றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்துட்பொருளாவாள்.

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமை காட்டி விலக்கிடும் தெய்வம்
உய்வமென்ற கருத்துடையோர்கள்
உயிரினுக்குயிராகிய தெய்வம்
செய்வமென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கை வருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்

–பாரதியார்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்- வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியாசனம் வைத்த தாய்.

-காளமேகப் புலவர்

கல்வி ஓங்கி வளர...

த்ருங் ந்யஞ்சநோ தஞ்சநோத்யல் லய ஸர்கோ
லகுக்ரிய:
வித்யாஸஹாயோ வாகீசோ மாத்ருகா மண்டலீக்குத:
(தினமும் 10 முறை ஜபம் செய்யவும்)

அறிவு வளர்ச்சி பெற...

லக்வ்யைவ சிக்ஷயா பாப மசேஷமபி நிர்ணுதந்
த்ரிஸ்தூண சேஷாபதோ பூத ஸூக்ஷ்மைஸ் ஸூக்ஷ்ம
வபுஸ் ஸ்குஜந்

ஸகல சாஸ்த்ர ஞானம் ஏற்பட...

ப்ரபேதுஷாம் பேஜுஷாம்ச யமத்ருஷ்டி மபாவயந்
திவ்யதேஹ ப்ரதஸ் ஸூர்யம் த்வாரயந்
மோக்ஷமேயுஷாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academ

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தட்சிணாமூர்த்தி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

படிப்பில் தேர்ச்சி பெற...

அக்ஷி மாலாஸ்க்ஷ ராகாராஸ் க்ஷிராக்ஷர பலப்ரதா
அநந்தாஸ் நந்த ஸுகதாஸ் நந்த சந்த்ர நிபாநநா.
(தினமும் காலையில் பத்து முறை ஜபம் செய்யவும்)

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது- பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நான்கும் கலந்துனக்கு நான் தருவேன்
கோலஞ்செய் துங்கக் கரிமுகத்துத் தூமணியே
நீ எனக்குச் சங்கத்தமிழ் மூன்றும் தா.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academ

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தட்சிணாமூர்த்தி ஸ்லோகம்

ஓம் நமோ பகவதே தட்சிணாமூர்த்தயே
மஹ்யம் மேதாம் ப்ரக்ஞாம்
ப்ரயச்ச ஸ்வாஹா.

குருமூர்த்தி ஸ்லோகம்

குருர் ப்ரஹ்மா, குருர் விஷ்ணு
குருர் தேவோ மஹேச்வர:
குரு ஸாக்ஷாத் பரப்ரஹ்மா
தஸ்மை ஸ்ரீ குரவே நம:
குரவே ஸர்வ லோகானாம்
பிஷஷே பவ ரோகிணாம்
நிதயே ஸர்வ வித்யானாம்
ஸ்ரீ தட்சிணாமூர்த்தயே நம:

குரு காயத்ரி

நவக்கிரகங்களில் குருவுக்குக் காயத்ரி உண்டு.
விருஷப த்வாஜாய வித்மஹே க்ருணி ஹஸ்தாய
தீமஹி
தந்நோ குரு: ப்ரசோதயாத்

புதன் காயத்ரி

கஜ த்வஜாய வித்மஹே சுக ஹஸ்தாய தீமஹி
தந்நோ புத: பிரசோதயாத்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கல்வியின் நோக்கம்

உண்மையான கல்வி என்பது ஆத்ம ஞானம் அடைய உதவுவதே ஆகும். அதனால் மக்கள் அமரத்துவம் அடைகிறார்கள். எதற்கு மேலாக ஒரு பயன் உலகில் இல்லையோ அந்தப் பயனை உண்மைக் கல்வி அளிக்கிறது. மற்றவிதமான கல்விப் பயிற்சிகளெல்லாம் உலகப் பயனை அளிக்கின்றன. ஆனாலும் அவையும் படிப்படியாக இறைவனைச் சேர உபயோகப்படலாம். உலகப் பயன் என்பது பொதுவாகப் பொருள் திரட்டுவதையே குறிக்கின்றது. பொருளும் கூடப் பலவித தருமங்களைச் செய்யப் பயன்படுகிறது. எனவே லௌகீக தருமங்களும் பிரம்ம ஞானத்துக்குச் சாதனமாகின்றன. 'தனக்கு விதிக்கப்பட்ட தர்மங்களைச் சரிவர நடத்துவதாலும், தவத்தினாலும், இறைவனை வணங்கி வழிபடுவதாலும் ஒருவன் ஆத்ம ஞானத்தை அடைகிறான்' என ஆதி ஆசாரியர்கள் கூறியுள்ளார்கள்.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academ

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



காஞ்சிப் பெரியவர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஹயக்ரீவரை வழிபடுவோம்!

கல்விக்கு முதற்கடவுள் ஸ்ரீஹயக்ரீவர்.

ஸ்ரீதேசிகன் எம்பெருமானைப் பற்றிப் பாடிய பல துதிகளில் அவர் திருவாக்கிலிருந்து முதலில் வெளிவந்தது ஸ்ரீஹயக்ரீவர் ஸ்தோத்திரமாகும்.

எம்பெருமான் உலகத்தை வாழ வைக்க எடுத்த அவதாரங்களில் ஸ்ரீஹயக்ரீவர் அவதாரம் தனிப்பட்டது.

ஹயக்ரீவர் என்றால் குதிரை போன்ற கழுத்துடையவர் என்று அர்த்தம்.

இந்த அவதாரத்தில் திருமுகம் குதிரை போல உள்ளது.

கடலூருக்குப் பக்கத்தில் உள்ள திருவஹிந்திபுரத்திலே மலை மேல் ஸ்ரீதேசிகன் ஹயக்ரீவ மந்திரம் உபதேசிக்கப்பட்டு, அவரைத் தியானித்தார். அப்போது எம் பெருமான் ஸ்ரீஹயக்ரீவனாய் ஸ்ரீதேசிகன் எதிரிலே காட்சி தந்தார். உடனே தேசிகன் ஹயக்ரீவர் ஸ்தோத்திரத்தைப் பாடலானார்.

இந்த ஸ்தோத்திரத்தைச் சொல்லி, பய பக்தியுடன் பாராயணம் செய்தால் உயர்ந்த

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academ

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ஹயக்ரீவர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கல்வியும் வாக்குவன்மையும் ஏற்படுமென்று சுட்டிக்காட்டுகின்றார் ஸ்ரீதேசிகன்.

அதன் முதல் ஸ்லோகம் கீழே தரப்படுகிறது.

'ஜ்ஞாநாநந்தமயம் தேவம் நிர்மல ஸ்ப்படிகாக்குதிம்
ஆதாரம் ஸர்வ வித்யாநாம் ஹயக்ரீவமுபாஸ்மஹே.

இந்த ஸ்லோகத்தைக் காலை, மாலை இருநேரங்களிலும் பன்னிரண்டு தடவை தினமும் சொன்னால் மனத்திட்பம் உண்டாகும். மதிவளம் பெருகும். கல்வியில் மேன்மை பெறலாம். எல்லாத் தேர்வுகளிலும் முதன்மையான வெற்றியைக் காணலாம்.

குறிப்பு :

குரு காயத்ரி, ஸ்லோகம், புதன் காயத்ரி, ஸ்லோகம் இரண்டும் முன்பகுதியில் தரப்பட்டிருக்கின்றன. புதனுக்கு 5 தடவையும், குருவுக்கு 3 தடவையும் ஆக அந்த ஸ்லோகத்தையும், காயத்ரியையும் பாராயணம் செய்ய வேண்டும். இவற்றால் உள்ளத்தில் தெளிவும், படிப்பில் ஆர்வமும், படித்த விஷயங்களில் ஞாபக சக்தியும் தக்கசமயத்தில் படித்த விஷயங்களைக் கொண்டு தங்களை மற்றை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academ

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யோர் முன்னிலையில் நிறுத்திக் கொள்ளவும் வாய்ப்புகள் உண்டாவது உறுதி!

ஆகையால் இந்தக் கருத்துரைகளைப் பெரியோர்கள் தந்த வரப்பிரசாதமாகக் கருதி, சிக்கெனக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மாணவர்கள் தங்களை வளப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

வாழ்க மாணவர் உலகம்!

வாழ்க வருங்கால அறிவாளிகள் உலகம்!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஏதாம் புவியில் பெறற்கரிதாவது எனக் கினியே!

ஸரஸ்வதி அந்தாதி என்ற நூலைக் கவிச்சக்ரவர்த்தி கம்பன் அருளிச் செய்தார்.

இந்நூலின் காப்புச் செய்யுளே, 'ஆய கலைகள்' என்று தொடங்கும் செய்யுளும், 'படிக நிறமும்' என்ற செய்யுளும் ஆகும். இந்த அந்தாதி நூலின் முதற் செய்யுள், 'சீர் தந்த வெள்ளிடை' எனத் தொடங்கும். காப்புச் செய்யுளின் அந்தாதி நூலின் முதற்பாடலையும் தினமும் காலை, மாலை ஐந்து முறைகள் சொன்னால் போதும் கலைகளிலும் கல்வி யிலும் தேர்ச்சி அளிப்பாள் கலைமகளாம் சரஸ்வதித் தாய்.

"பாதாம் புயத்தில் பணிவார் தமக்குப் பலகலையும்
வேதாந்த முத்தியும் தந்தருள் பாரதி வெள்ளிதழ்ப்பூஞ்
சீதாம்புயத்தில் இருப்பாள் இருப்ப என் சிந்தையுள்ளே
ஏதாம் புவியில் பெறற்கரிதாவது எனக்கினியே."

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academ

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



புதன் பகவான்

C-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acaden

Vaidika Pandit Sri V Hariharan Collection; Sholinganallur, Chennai

இந்தப் பாசுரத்தை காலை, மாலை இரண்டு வேளைகளிலும் மூன்று முறை படித்துப் பாராயணம் செய்தால் மாணவர்கள் மறதியற்ற ஞாபகசக்தி பெற்று, தேர்வுத் தாளுக்குத் தக்க விடை எழுதி, தேர்வில் அதிகம் விழுக்காடு மதிப்பெண் கிடைக்கப் பெறுவார்கள்.

குறிப்பு: இந்தப் பாடலை மாணவர்கள் மட்டுமல்லாமல், எல்லோருமே ஆழ்ந்த லயத்துடன் வேறு சிந்தையின்றி கண்களை லேசாக மூடிக் கொண்டு, இதழ்கள் லேசாக விரிய உச்சரிப்பார்களானால் சரஸ்வதியை மனக்கண்ணில் மட்டுமல்லாமல் புறக் கண்ணிலும் காணப் பெறுவார்கள் என்று பெரியோர்கள் கூறியிருப்பதை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன். என் வாழ்க்கையிலும் அந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் எல்லோரும் இதை நம்பி ஏற்றுக்கொண்டு பின்பற்ற வேண்டும். பின்பற்றினால் மாபெரும் அறிவாளியாகவும், எல்லாக் கலைகளிலும் மேதையாகவும் தங்களை உருவாக்கிக் கொள்ளமுடியும் என்பது உறுதி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academ

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



சந்திர பகவான்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சாரதா புஜங்க அஷ்டகம்

சாரதா புஜங்காஷ்டகம் என்று ஸ்ரீசங்கராச் சாரியார் அருளிய எட்டு ஸ்லோகங்கள் உண்டு. எட்டு ஸ்லோகங்களையும் படித்து, சரஸ்வதி அருள் பெறலாம்.

முதல் ஸ்லோகம் கீழே தரப்பட்டிருக்கிறது. அதையே 8 முறை சொன்னாலும் பலன் உண்டு.

ஸுவக்ஷோஜகும்பாம் ஸுதாபூர்ணகும்பாம்
ப்ரஸாதாவலம்பாம் ப்ரபுண்யாவலம்பாம்
ஸதாஸ்யேந்து பிம்பாம் ஸதானோஷ்டபிம்பாம்
பஜே சாரதாம்பாம் அஜஸ்ரம் மதம்பாம்.

'மாணிக்கய வீணாம்' என்று தொடங்கும் ஸ்ரீசியாமளா தண்டகம் மிகவும் விஷேடமானது. சியாமளா தண்டகத்தில் முதல் இரண்டு ஸ்லோகங்கள் தரப்பட்டிருக்கின்றன. அவற்றை காலை, மாலை இரு வேளைகளிலும் மூன்று தடவை சொல்வது அவசியம். நிச்சயமாகப் பலன் தரும்.

படிப்பதற்கு ஞானம் இருக்கும். தேர்வில் பரிட்சை எழுதும்போது ஞாபகம் இருக்கும். பத்திரிகையில் ரிசல்ட்டைப் பார்க்கும்போது ஆஹா! என்று மகிழ்ச்சி அடையும் வகையில் பெரிய வெற்றி கிடைக்கும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academ

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சரஸ்வதி பூஜை

இந்த ஸ்லோகங்களின் மதிப்புக்கு அளவே இல்லை. வருடத்திற்கு ஒருமுறை சரஸ்வதி பூஜை என்று ஒரு நாள் வரும். தமிழ் வருடத்தில் புரட்டாசி மாத சுக்ல பட்சத்தில் நவராத்திரி நிறைவின்போது இந்த சரஸ்வதி பூஜை வரும்.

நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகள் என்று அர்த்தம். ஒன்பது இரவுகளைக் கொண்ட ஒன்பது நாட்கள் என்றும் நாம் சொல்ல வேண்டும். முதல் மூன்று நாட்களில் மகா துர்க்கையை வழிபடவேண்டும். அடுத்த மூன்று நாட்களில் ஸ்ரீமகாலட்சுமியை வழிபடவேண்டும். கடைசி மூன்று நாட்களில் சரஸ்வதி வழிபாடு செய்யப்பட வேண்டும்.

சரஸ்வதி பூஜை அன்று அழகான மேடை அமைத்து, அதில் புதிதான பட்டு விரிப்புப் போட்டு, அதன் மீது வேத சாஸ்த்ர, இதிகாச, புராணாதி நூல்கள், அவரவர் படிக்கும் புத்தகங்கள், தொழிற் கல்விக்குரிய புத்தகங்கள், கருவிகள், வீணை முதலிய வாத்யங்கள் இவற்றை முறையாக வைக்க வேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சந்தனம், குங்குமம், புஷ்பம் இவற்றால் அதை அலங்கரிப்பது மிக முக்கியம்.

இங்கே சரஸ்வதி ஸ்லோகங்கள் நிறைய சொல்லப்பட்டுள்ளன. சரஸ்வதி காயத்ரியும் தரப்பட்டுள்ளது. முதலில் காயத்ரியையும், பிறகு தியான சுலோகங்களையும் சொல்ல வேண்டும்.

நவராத்திரி என்பது சகல வித்தைகளையும் அளிக்கும் பராசக்தியை மூலமாகக் கொண்ட விழா.

அந்தப் பராசக்தியே சரஸ்வதி உருவமாகத் தோன்றி, வேண்டுவோர் வேண்டியவற்றை யெல்லாம் வாரி வழங்குவார்.

இந்தத் தத்துவத்தை நன்கு புரிந்து கொண்டு, பிரார்த்தனை முடிந்தபிறகு மீண்டும் ஒருமுறை சரஸ்வதி காயத்ரியைச் சொல்லி முடிக்க வேண்டும். சொல்லச் சொல்ல தேர்வில் நீங்கள் வெல்ல சாதனைகள் பெருகும்!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academ

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,